# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர் மற்றும்
பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : **335 / 2010 / எம்சி. 8** நாள் : **11.1.2010**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

---

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 13.01.2010 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

11/1/10
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம்
## ஜனவரி 2010

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமைப் பழக்கத்தைக் கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| **1** | **Jnnurm** – பில்லூர் 2-ம் குடிநீர் திட்டம் - சாலை சீரமைப்புக் கட்டணம் செலுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **2** | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - 2010-13 ம் ஆண்டிற்கான ஏல இனங்கள் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **3** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - 2010-13 ம் ஆண்டிற்கான ஏல இனங்கள் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **4** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வருடாந்திர ஏல இனங்கள் - கட்டணம் மாற்றியமைத்தல் -மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **5** | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - 2010-13 ம் ஆண்டிக்கான ஏல இனங்கள் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **6** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் ரோடு காய்கறி மொத்த வியாபார மார்க்கெட் - கடை எண் 70 – பெயர் மாற்றம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

நன்றியுரை

**அ) திருக்குறள்**

**நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்**
**பயனில சொல்லாமை நன்று.**

**(குறள் -197)**

**விளக்கம்**

**பண்பாளர்கள், இனிமையல்லாத சொற்களைக்கூடச் சொல்லி விடலாம், ஆனால் பயனில்லாத சொற்களைச் சொல்லாமல் இருப்பதே நல்லது.**

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் 1

கோவை மாநகராட்சி, தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. இதில் ஒரு பகுதி பணியான கட்டன் மலை குகை வெளியேற்றத்திலிருந்து ராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத் தொட்டி வரை 1000 முதல் 1500 எம்.எம் வரை எம்.எஸ். (MS) மற்றும் பி.எஸ்.சி. (PSC) குழாய் அமைத்தல் பணி ரூ. 57.17 கோடி செலவில் மெஸ்ஸர்ஸ் நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட், ஹைதராபாத் என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணியில் விளாங்குறிச்சி சாலையில் 2.80 கிமீ நீளத்திற்கு 1200 MM விட்டமுள்ள குடிநீர் குழாய் பதிக்க ஊராட்சி ஒன்றிய சாலையான கோவை சத்தி ரோடு முதல் விளாங்குறிச்சி சாலையிலும், ஊராட்சி சாலையான 1.10 கிமீ நீளமுள்ள சரவணம்பட்டி – காளப்பட்டி ரோடு முதல் விநாயகபுரம் ரோடு வரை சாலையை வெட்டி குடிநீர் குழாய் பதிப்பதற்காக சாலை சீரமைப்பு கட்டணம் செலுத்த கடந்த 12.10.09–ல் மாநகராட்சியால் கோரப்பட்டு வட்டார வளர்ச்சி அலுவலர், சர்க்கார் சாமக்குளம் அவர்களிடமிருந்து கூடுதல் தொகை செலுத்த வேண்டியிருப்பின் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சாலை சீரமைப்பிற்காக (ரூ.17,04,500 + ரூ.5,88,000) ரூ.22,92,500/–ஐ செலுத்த கடந்த 13.11.09–ல் பெறப்பட்ட கேட்பின்படி மாநகராட்சியால் மேற்கண்ட தொகை கடந்த 17.11.2009–ல் செலுத்தப்பட்டு குடிநீர் பிரதான குழாய் பதிப்பு பணி துவக்கப்பட்டது. ஊராட்சி சாலையான காளப்பட்டி ரோடு முதல் விநாயகபுரம் ரோடு வரையிலான சாலையினை வெட்டி குடிநீர் பிரதான குழாய் பதிக்கப்படும் சமயம் ஒன்பது (9) ஆர்.சி.சி. பைப் கல்வெர்ட்டுகளும் இடிக்கப்பட்டு குடிநீர் பிரதான குழாய் பதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இந்நிலையில் வருகிற ஜீன்மாதம் கோவையில் தமிழக அரசால் உலகத்தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற உள்ளதால், இச்சாலையினை திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோவை, ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் மற்றும் JNNURM திட்ட செயற்பொறியாளர் அவர்களால் கடந்த 05.01.2010–ல் நேராய்வு செய்யப்பட்டது. குடிநீர் குழாய் பதிக்க வெட்டப்பட்ட சாலை பகுதி, கல்வர்ட் பணிக்கு மாநகராட்சியில் செலுத்தப்பட்ட தொகை போதுமானதாக இல்லையெனவும், சாலை செப்பனிடவும், இடிக்கப்பட்டுள்ள குழாய் கல்வர்ட்டுகளை மீண்டும் சீரமைத்து சாலையினை போக்குவரத்திற்கு உகந்ததாக சரிசெய்யவும், கூடுதலாக ஆகும் செலவினம் கணக்கிடப்பட்டு தெரிவிப்பதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டது.

ஊராட்சி சாலையில் வரும் ஒன்பது (9) ஆர்.சி.சி. பைப் கல்வர்டினை சீரமைக்கவும், சாலை செப்பனிடவும், தேவைப்படும் மதிப்பீடு தொகையினை கணக்கிட்டு, மாநகராட்சி செலுத்த வேண்டி திருத்திய சீரமைப்பு கட்டணமாக ரூ. 32.74 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்கள் கடிதஎண். 619/2009/B1 நாள் 08.01.2010–ல் மாநகராட்சியில் செலுத்தப்பட்ட சாலை சீரமைப்பு கட்டணம் ரூ.17.04 இலட்சம் போக கூடுதலாக ரூ. 15.70 இலட்சம் தொகை செலுத்த கோரப்பட்டுள்ளது. திருத்திய சாலை சீரமைப்பு கட்டணம் ரூ. 32.74 இலட்சத்துடன் ஊராட்சி ஒன்றிய சாலை சீரமைப்புக்காக செலுத்தப்பட்ட ரூ. 5.88 இலட்சத்தினையும் சேர்த்து மாநகராட்சியால் செலுத்தப்படும் ரூ. 38.62 இலட்சத்திற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்தில் ஊராட்சி ஒன்றிய சாலை மற்றும் ஊராட்சி சாலையில் குடிநீர் திட்ட பிரதான குழாய்கள் பதிப்பதனால் ஏற்படும் சாலை சீரமைப்புக் கட்டணம் ரூ. 38.62 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதை மாமன்றம் ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 4614 /08 / JN5

மாநகர மன்ற தீர்மானம் எண் 192 நாள் 13.01.2010

அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 2

பொருள்-உரிம இனங்கள்–கோயம்புத்தூர் மாநகராட்சி-கிழக்கு மண்டலம் உரிம இனங்களுக்கு 01.04.2010 முதல் 31.03.2013 முடிய உள்ள மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் வழங்க பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - தொடர்பாக.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள உரிம இனங்களின் வாயிலாக பெறப்படும் பலன்களை அனுபவித்துக் கொள்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( மா.ந.2) துறை அரசு ஆணை (நிலை) எண்.78 நாள்.25.5.2009ன்படி 01.04.10 முதல் 31.03.13 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் வழங்க பொது ஏலம் / மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டியுள்ளது.

<u>உரிம இனங்கள் (01.04.2010 முதல் 31.03.2013 முடிய)</u>

1 சிங்காநல்லூர் தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
2 சிங்காநல்லூர் ஆடு அறுவை மனை (8 கடைகளுடன் கூடியது) - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
3 உப்பிலிபாளையம் ஆடு அறுவை மனை - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
4 சௌரிபாளையம் ஆடு அறுவை மனை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
5 சிங்காநல்லூர் பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம்- கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
6 இராமநாதபுரம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
7 புலியகுளம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
8 பாப்பநாயக்கன்பாளையம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
9 ரேஸ்கோர்ஸ் ரோடு மாநகராட்சி கட்டண கழிப்பிடம் - கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
10 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
11 சிங்காநல்லூர் பேருந்து நிலையம் வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
12 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம்.
13 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் எடை காட்டும் இயந்திரங்கள் மூன்று எண்ணிக்கை அமைத்து நடத்திக்கொள்ளும் உரிமம்
(மூன்றாண்டுகளுக்கு)

மேற்காண் இனங்களில் வரிசை எண்.1 முதல் 13 வரையிலான உரிமை இனங்களை 1.4.2010 முதல் 31.3.2013 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கான வரும் பலன்களை அனுபவித்துக் கொள்வதற்கு உரிமம் வழங்க பொது ஏலம் / மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் கோரவும் அதற்கான அறிவிப்புக்களை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினங்களை ஏற்றுக் கொள்ளவும் பொது ஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளை அங்கீகரிக்கவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு அனுமதி எண்.4 நாள்.11.1.2010 ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காண் பொருள் குறித்து பொது ஏலம் / மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் கோரவும் அதற்கான அறிவிப்புக்களை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் பொது ஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளை அங்கீகரிக்கவும் அதற்கான செலவினங்களை ஏற்றுக் கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>-அனுமதிக்கலாம் **ந.க.எண்.15525/2009/கி.அ.11**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 193 நாள் 13.01.2010</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந 2) துறை அரசு ஆணை (நிலை) எண் 78 நாள் 25.05.09 மற்றும் அவ்வாணையில் உள்ள நிபந்தனைகளுடன் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 4 நாள் 11.1.2010 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 3

பொருள் குத்தகை இனங்கள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் குத்தகை இனங்களுக்கு 2010-2011-ம் ஆண்டுக்கு 1.4.2010 முதல் 31.3.2013 முடிய உள்ள மூன்றாண்டு காலத்திற்கு கட்டணம் வசூலிக்க உரிமம் வழங்க பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - குறித்து.

------------------

<u>குத்தகை இனங்கள் விபரம்</u>

1) பன்னீர் செல்வம் பூ மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை
(28 நிரந்தரக் கடைகள், 144 மேடைக்கடைகள் நீங்கலாக.)

2) மேட்டுப்பாளையம் ரோடு தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை.

3) மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கனி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை.

4) ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி ஆண்கள் மேல் நிலைப் பள்ளி அருகிலுள்ள வாழைக்காய் மொத்த வியாபார மண்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

5) பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

6) மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கனி மார்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

7) மேட்டுப்பாளையம் அண்ணா தினசரி மார்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

8) தடாகம் ரோடு நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

9) காந்திபார்க் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

10) காந்திபார்க் நீச்சல் குளம் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

11) மேட்டுப்பாளையம் ரோடு எடை மேடையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

12) திவான் பகதூர் ரோடு மாநகராட்சி பள்ளி வளாக மைதானத்தில் வாகனங்கள் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமை.

எனவே மேற்படி இனங்களை 2010-2013 முடிய உள்ள ஆண்டுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை அச்சகத்தில் அச்சிடவும், தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் அதன் பொருட்டு உண்டாகும் செலவினங்களை மாநகராட்சி ஏற்றுக் கொள்ளவும், மறு ஏலம் கோரும் இனங்களை அவ்வப்போது செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யவும், அதற்குண்டான விளம்பரக் கட்டணங்களை ஏற்கவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 1, நாள் 11.01.2010ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க. எண்.12496/2008/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 194 நாள் 13.01.2010**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந 2) துறை அரசு ஆணை (நிலை) எண். 78 நாள் 25.05.09 மற்றும் அவ்வாணையில் உள்ள நிபந்தனைகளுடன் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 1 நாள் 11.01.2010 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 4

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி, மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்கெட் - சுங்கம் வசூலிக்கும் உரிமை – மாநகராட்சி பைலா கட்டணத்தை மாற்றி அமைக்க திரு. M. செல்வம், திருமதி. S.ஜெயா ஆகிய குத்தகைதாரர்கள் கோரியது.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி குத்தகைதாரர் திரு. M. செல்வம், மற்றும் மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்கெட் குத்தகைதாரர் திருமதி. S.ஜெயா ஆகியோர் தங்களது 10.09.2009 ம் தேதிய விண்ணப்பத்தில் மேற்படி மார்கெட்டை சுங்கம் வசூலிக்கும் உரிமைக்கு ஏலம் எடுத்து நடத்தி வருவதாகவும், மேற்படி மார்கெட்டில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை இதுவரை நிர்ணயம் செய்து மாநகராட்சி பைலா வெளியிட்டு வருகிறது என்றும் ஆண்டுக்காண்டு சுங்க ஏலத்தொகையை 15% சதவீதம் முதல் 100% சதவீதம் வரை வியாபார போட்டியினால் உயர்த்த வேண்டி வருகிறது என்றும் 2009-2010 ஆண்டில் கீழ்கண்டவாறு கட்டணங்களை மாற்றி அமைத்து புதியதாக கட்டணம் நிர்ணயம் செய்துதரக் கோரியுள்ளனர் மற்றும் சில இனங்களுக்கான கட்டணங்களை பைலாவில் சேர்க்கவும் கோரியுள்ளனர்.

<u>வாழைக்காய் மண்டியில் (தடாகம் ரோடு )</u>

| பைலாவில் உள்ள | தற்போதைய கட்டணம் | மாற்றியமைக்க வேண்டிய கட்டணம் |
|---|---|---|
| 1) லாரி ஒன்றுக்கு | ரூ.30.00 | ரூ.40.00 |
| 2) வாழைத்தார் ஒன்றுக்கு | ரூ. 0.35 | ரூ. 2.00 |
| 3) டெம்போ ஒன்றுக்கு | ரூ.15.00 | ரூ.20.00 |

| பைலாவில் உள்ள | தற்போதைய கட்டணம் | சேர்க்கப்பட வேண்டிய இனங்கள் மாற்றியமைக்க வேண்டிய கட்டணம் |
|---|---|---|
| 1) ஆட்டோ நடை ஒன்றுக்கு | ----- | ரூ.15.00 |
| 2) கை வண்டி ஒன்றுக்கு | ரூ.1.50 | ரூ.10.00 |
| 3) இரண்டு சக்கர வாகனம் | ரூ.1.50 | ரூ. 5.00 |
| 4) சைக்கிள் | ரூ.0.75 | ரூ. 2.00 |

<u>மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்கெட்</u>

| | தற்போதைய கட்டணம் | மாற்றி அமைக்க வேண்டிய கட்டணம் |
|---|---|---|
| 1) A, B,C.D. பிளாக் 5 X 6 அடி | ரூ. 6.00 | ரூ. 20.00 |
| 2) லாரி 1க்கு | ரூ.30.00 | ரூ. 40.00 |
| 3) டெம்போ 1க்கு | ரூ.15.00 | ரூ. 20.00 |
| 4) மொபட் ஸ்கூட்டர் 1க்கு | ரூ. 3.00 | ரூ. 5.00 |
| 5) இருசக்கர வாகனம் (சைக்கிள்) | ரூ. 1.00 | ரூ. 2.00 |
| 6) தரை கடைகள் 4 x 4 | ரூ. 3.00 | ரூ. 15.00 |
| 7) தக்காளி கூடை ஒன்றுக்கு | ரூ. 1.50 | ரூ. 2.00 |

<u>சேர்க்கப்பட வேண்டிய இனங்கள்</u>
<u>தலைச்சுமைகள்</u>

| | |
|---|---|
| 1) தேங்காய் மூட்டை ஒன்றுக்கு | ரூ. 3.00 |
| 2) காய்கறி மூட்டை ஒன்றுக்கு | ரூ. 3.00 |
| 3) மளிகை சாமான்கள் அனைத்துக்கும் மூட்டை ஒன்றுக்கு | ரூ. 3.00 |
| 4) எண்ணெய், பிஸ்கட், சோப்பு, டின் ஒன்றுக்கு | ரூ. 2.00 |
| 5) பாரம் ஏற்றி வரும் இரண்டு சக்கர வாகனம் நடை ஒன்றுக்கு | ரூ. 5.00 |
| 6) ஆட்டோ நடை ஒன்றுக்கு | ரூ. 15.00 |
| 7) காளி பிளவர் லோடு ஒன்றுக்கு | ரூ. 250.00 |
| 8) பூசணிக்காய் லோடு ஒன்றுக்கு | ரூ. 350.00 |
| 9) வாழைத்தார் ஒன்றுக்கு | ரூ. 2.00 |
| 10) கை வண்டி நடை ஒன்றுக்கு | ரூ, 15.00 |
| 11) இலை கட்டு ஒன்றுக்கு | ரூ. 2.00 |
| 12) தக்காளி டிப்பர் 25 கிலோ ஒன்றுக்கு | ரூ. 3.00 |

மேற்குறிப்பிட்டுள்ளவாறு கட்டணங்களை மாற்றியமைத்து நிர்ணயம் செய்ய வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தனது தீர்மான எண். 2 நாள்.11.01.2010-ன்மூலம்,

1) பொருளில் 8 டன் கொள்ளவு கொண்ட லாரிக்கு கட்டணமாக ரூ.60/-, 8 டன்னுக்கு மேல் கொள்ளவு கொண்ட லாரிக்கு கட்டணமாக ரூ.100/- டெம்போ ஒன்றுக்கு ரூ.50/-, ஆட்டோ நடை ஒன்றுக்கு ரூ.40/-, கை வண்டி ஒன்றுக்கு ரூ.5/-, தக்காளி டிப்பர் 25 கிலோ ஒன்றுக்கு ரூ.5/- நிர்ணயம் செய்யவும், பிற இனங்களுக்கு பொருளில் மாற்றியமைக்க நிர்ணயம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ள கட்டணங்களை நிர்ணயம் செய்து மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பபட்டது.

2) மேட்டுப்பாளையம் ரோடு, அண்ணா தினசரி மார்க்கெட் வரிசை எண்.1 கடைக்கு ரூ.25/-, வரிசை எண்.6/-, கடைக்கு ரூ.20/- நிர்ணயம் செய்து பரிந்துரை தீர்மானிக்கப்பட்டது.

3) இக்கட்டண விகிதங்களை நான்கு மண்டங்களிலும் உள்ள ஏல இனங்களுக்கான கட்டனமாக நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

4) இக்கட்டண விகிதங்களை 1.4.2010 முதல் அமலுக்கு கொண்டுவர பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

5) பன்னீர் செல்வம் பூ மார்க்கெட்டில் கூடை அல்லது ஒரு கூடை அளவுள்ள தலைச் சுமைக்கு ரூ.3/-, பூ பாரம் ஏற்றிய சைக்கிள் 1/-க்கு ரூ.6/-, கமிஷன் வியாபாரத்திற்கு வரும் பூக்கூடை ஒன்றுக்கு ரூ.6/-, சாமந்திப்பூ, அரளிப்பூ மருகு கட்டு அடங்கிய சிறிய கூடை ஒன்றுக்கு ரூ.3/- நிர்ணயம் செய்தும், 1.4.2010 முதல் இக்கட்டண விகிதங்களை அமல்படுத்தவும் மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே மேற்படி கட்டண விகிதங்களை 1.4.2010 முதல் அமல்படுத்தியும், இக் கட்டணங்களை நான்கு மண்டலங்களுக்கு நடைமுறை படுத்தவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மா எண்.2, நாள்.11.01.2010 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண்.12496/2008/அ1 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 195 நாள் 13.01.2010**

**பொருள் ஒத்தி வைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 5

பொருள்: வருடாந்திர உரிமம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் குத்தகை இனங்களை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக.

************

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை இனங்களை 2010-2011, 2011-2012 மற்றும் 20012-2013 மூன்று ஆண்டிற்கு உரிமம் ஒப்படை செய்வதற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளி நடத்தப்பட உள்ளது.

**ஏல இனங்கள்**

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல இனங்கள் | |
|---|---|---|
| 1. | நவீன பொதுக் கழிப்பிடம் - கணபதி கட்டணம் வசூலிக்கும் உரிமை | |
| 2. | நவீன பொதுக் கழிப்பிடம் - சீனிவாசபுரம், காந்திபுரம், கட்டணம் வசூலிக்கும் உரிமை | |
| 3. | சத்தி ரோடு புல்மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமை | |
| 4. | சத்தி ரோடு ஆடு, மாடு அறுவை மனையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | |
| 5. | ஆம்னி பேருந்து நிறுத்தத்தில் ஆம்னி பேருந்து நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | |
| 6. | நவீன பொதுக் கழிப்பிடம் சத்திரோடு ஆம்னி பேருந்து நிலைய கட்டணம் வசூலிக்கும் உரிமையை தனியார் பங்களிப்புடன் பராமரிக்கலாம். | பேருந்து நிலையங்களில் உள்ள நவீன கழிப்பிடங்கள் மட்டும் தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. பேருந்து நிலையம் மாநகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.<br>வரும் நிதியாண்டிலிருந்து மாநகராட்சி ஆம்னி பேருந்து நிலையத்தில் சேர்த்து நவீன கட்டண கழிப்பிடங்களையும் பராமரித்து கொள்ளவும் பேருந்து நிலையங்களில் போதுமான காவலர்கள் நியமித்து பாதுகாப்பு செய்வதுடன் ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்படா வண்ணம் பாதுகாக்கவும், மேலும் ஆம்னி பேருந்து நிலையம் மற்றும் கழிப்பறைகளுக்கு வர்ணம் செய்து தூய்மையாக வைத்துக் கொள்ளவும் தனியார் பங்களிப்புடன் கழிப்பிடங்களை புதுப்பித்து கட்டிக் கொள்ளவும் அதற்கு தேவையான ஒப்பந்தப்புள்ளிகள் கோரலாம். |

<u>புதியதாக சேர்க்கப்பட வேண்டிய இனங்கள்</u>

| | |
|---|---|
| 1. | காந்திபுரம், சீனிவாசபுரம் - இரண்டு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 2. | சிவானந்தா காலனி பேருந்து நிலையம் அருகில் நவீன கட்டண கழிப்பிடம் |

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.48233/06/ஆர்.3, நாள்.13.02.2009-ல் ஏல இனங்களை மூன்று ஆண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்புந்தப்புள்ளிகள் மூலம் ஒப்படைப்பு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி மேற்கண்ட இனங்களை 2010-2011 முதல் மூன்று ஆண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஒப்படைப்பு செய்யலாம். மேற்படி செய்யப்பட்ட குத்தகை இனங்களை அரசாணை (நிலை) எண்.78, நாள்.25.05.09 தெரிவித்துள்ளபடி வருடாந்தர குத்தகை இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமைகளை தற்போது நடைமுறையில் உள்ள ஓராண்டுக்கு பதிலாக மூன்றாண்டுகளுக்கு கீழே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமம் வழங்கலாம்.

1. உரிமையாணை இனங்களை ஒப்படைக்கும் தேதி முதல் 30.03.2013 முடிய (10-11, 11-12, 12-13) மூன்று நிதியாண்டு காலத்திற்கு ஏலம் விடலாம்.
2. 
3. மேற்படி இனங்கள் அனைத்திற்கும் ஆண்டு உரிமை தொகை அடிப்படையில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும்.

4. ஆரம்பத்தில் ஏலத்தில் பெறப்படும் உரிமத் தொகைகள் இரண்டாம் ஆண்டில் 5% சதவீத உரிமத் தொகை உயர்வும் மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டு உரிமத் தொகையில் 5% உரிமத் தொகை உயர்வு செய்யப்படும்.

5. மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் உரிமதாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு அவ்வுரிமம் வழங்கப்படும். வாரிசுதாரர்கள் விருப்பம் இல்லையெனில் அவ்வுரிமம் மறு ஏலம் விடப்படும்.

5 முதல் வருட உரிம தொகை முழுவதையும் உரிமம் உறுதி செய்தவுடன் செலுத்தப்பட வேண்டும். இரண்டாம் ஆண்டு உரிம தொகையினை முதலாம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் செலுத்த வேண்டும். மூன்றாம் ஆண்டு உரிம தொகையினை இரண்டாம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் செலுத்த வேண்டும். மேற்கண்டவாறு உரிய காலத்திற்குள் உரிமத் தொகை செலுத்தாவிடில் இம்மாநகராட்சியின் 2010-2013 ஆம் வருட உரிம இனங்களுக்கான ஏல நிபந்தனைகளில் கண்டுள்ளவாறு உரிமம் ரத்து செய்யப்பட்டு ஏலதாரர் பொறுப்பில் மறு ஏலம் விடப்படும்.

6 உரிமதாரர்கள் செலுத்திய வைப்பு தொகைகளை மூன்று வருட உரிம காலம் முடிந்த பின்னரே திரும்பி வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்டுள்ளபடி அரசாணையில் தெரிவித்துள்ள விபரங்களை மாநகராட்சி பொது ஏல நிபந்தனைகளில் சேர்க்கலாம். மேலும் ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளில் கீழ் குறிப்பிட்டுள்ளபடி மாற்றம் செய்யலாம்.

7 இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தப்படும் அனைத்து வாகனம் நிறுத்தும் இடங்களுக்கும் வசூலிக்கப்படும் கட்டணமானது 6 மணி நேரத்திற்கு மட்டும் பொருந்தும். அதன் பிறகு நிறுத்தப்படும் ஒவ்வொரு 6 மணி நேரத்திற்கும் முறையே கட்டணம் வசூலிக்கப்படும்.

8 உரிமம் பெற்றவர் மாநகராட்சிக்கு ஏல நிபந்தனைகளை ஏற்று கொண்டதற்கிணங்க அளிக்கப்படும் ஒப்பந்த பத்திரம் ரூ.20/- மதிப்புள்ள முத்திரை தாளில் அளிப்பதற்கு பதிலாக ரூ.100/- மதிப்புள்ள முத்திரை தாளில் பெறலாம்.

மேற்படி 2009-2010 ஆம் ஆண்டு ஏல இனங்களில் வரிசை எண்.1 முதல் 6 வரையிலான வருடாந்திர உரிம இனங்களுடன் புதிதாக சேர்க்கப்பட்ட இரண்டு இனங்களையும் 2010-2013ஆம் ஆண்டுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.6, நாள்:11.01.2010-ன்படி அனுமதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: **12974/2009/**அ7(வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 196 நாள் 13.01.2010</u>**

பொருளில் நிபந்தனைகள் வரிசை எண். 7-ல் தெரிவித்துள்ள இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தப்படும் இடத்திற்கான கட்டணம் 6 மணி நேரத்திற்குப் பதிலாக ஒவ்வொரு 3 மணி நேரத்திற்கும் கட்டணம் வசூலிக்கப்படும் என திருத்தம் செய்து பதிவு செய்யப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை (நிலை) எண். 78 நாள் 25.05.09 மற்றும் அவ்வாணையில் உள்ள நிபந்தனைகளுடன், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 6 நாள் 11.01.2010ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

பொருள்: கோவை மாநகராட்சி மேட்டுப்பாளையம் ரோடு காய்கறி மொத்த வியாபார மார்க்கெட்டில் - கடை எண்.70-ஐ திரு.ஜபருல்லா பெயரிலிருந்து திரு.R.மாணிக்கவாசகன் பெயரில் உரிமம் மாற்றம் செய்ய அனுமதி கோருவது – குறித்து.

---------------

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் திரு.R.மாணிக்கவாசகன் என்பவர் தனது 04.12.09-ந் தேதிய விண்ணப்பத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான, மேட்டுப்பாளையம் ரோடு காய்கறி மொத்த மார்க்கெட்டில் கடை எண்.70-ஐ திரு.ஜபருல்லா என்பவருக்கு 1997-ம் வருடம் மாநகராட்சி மூலம் கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் இக்கடையில் திரு. ஜபருல்லா என்பவருடன் தானும் சேர்ந்து கூட்டு வியாபார ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஸ்ரீவிஷ்ணுராம் டிரேடர்ஸ் என்ற பெயரில் 1998 முதல் வியாபாரம் செய்து வந்துள்ளதாகவும் 2001-ம் வருடம் தன்னிடமிருந்து ரூ.1 லட்சம் திரு.ஜபருல்லா பெற்றுக் கொண்டு கூட்டு வியாபார ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொண்டு அதற்கான ஒப்பந்தப்பத்திரத்தில் கையொப்பமிட்டுக் கொடுத்துள்ளார் எனவும் அது முதல் மேற்படி கடையில் தான் மட்டுமே வியாபாரம் செய்து வருவதாகவும், மேற்படி கடைக்கான மாதாந்திர வாடகையை மாநகராட்சிக்கு நிலுவையின்றி செலுத்தி வருகிறேன் என்றும் எனவே மேற்படி கடை எண்.70-ஐ அரசு ஆணை எண். 92-ன்படி தனது பெயருக்கு மாற்றித்தரக் கோரியுள்ளார். மற்றும் இதற்கு மாநகராட்சி நிர்ணயம் செய்யும் தொகை மற்றும் உரிமக் கட்டணத் தொகைகளையும் செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி கடை எண்.70-ஐ திரு.ஜபருல்லா என்பவருக்கு ந.க.எண்.157607/93/அ4 எண்ணிட்ட 30.01.97-ந் தேதிய உத்திரவில் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கடைக்கான மாதாந்திர உரிமம் கட்டணம் நிலுவையின்றி நவம்பர் 2009 முடிய செலுத்தியுள்ளார்.

திரு. ஜபருல்லா திரு. R.மாணிக்கவாசகன் ஆகியோர் கூட்டாக வியாபாரம் செய்ததற்கான 1998-ம் வருடத்திய கூட்டு வியாபார ஒப்பந்தப் பத்திரம் நகல் ரூ.100- மதிப்புள்ள முத்திரைத் தாளில் வழங்கப்பட்டுள்ளது. மற்றும், 2001-ம் வருடத்தில் கூட்டு வியாபார ஒப்பந்த விலகல் பத்திரம் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே அரசு ஆணை எண் 92 ந.நி.ம.கு.வ. துறை நாள் 03.07.07-ன்படி குத்தகை உரிமையை பெயர் மாற்றம் செய்ய கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொகை வசூலிக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1) 12 மாத மாதாந்திர உரிமம் கட்டணம் முன்பணம் | 1335x12= | ரூ.16020 |
| 2) 12 மாத வாடகைக்கு சமமான தொகை பெயர் மாற்றக் கட்டணம் | | ரூ.16020 |
| 3) பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பக் கட்டணம் | | ரூ. 500- |
| மொத்தம் | | ரூ.32540 |

மேற்படி தொகையை குத்தகை பெயர் மாற்றம் செய்யக் கோரும் திரு.R.மாணிக்கவாசகன் என்பவரிமிருந்து வசூலித்துக் கொண்டு, மாநகராட்சி குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு மேட்டுப்பாளையம் ரோடு காய்கறி மொத்த வியாபார மார்க்கெட் கடை எண்.70–ஐ திரு.R.மாணிக்கவாசகன் என்பவருக்கு குத்தகை உரிமையை பெயர்மாற்றம் செய்ய மாநகராட்சி நிதிக்குழுவின் தீர்மான எண் 3, நாள் 11.01.2010 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.11439/2009/ அ1 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 197 நாள் 13.01.2010**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 3 நாள் 11.01.2010 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி